



# பரலோக பொக்கிஷங்கள்

*உங்கள் பொக்கிஷம் எங்கே?... அங்கே உங்கள் இருதயம்!*

## தள்ளப்பட்ட கல்லை வைத்து கட்டுவது, கர்த்தரின் செயல்!

'புறக்கணிக்கப்படும்' துயரத்தால், மனமுடைந்து பின்னடையும் ஜனங்கள் இன்று ஏராளம்! தன் ஆண்டவரின் கையில் அடங்கியிருப்பவர்களே, பிறரால் புறக்கணிக்கப்படுவது "கர்த்தரின் செயல்" என அறிந்திருப்பார்கள்! வீடு கட்டுகிறவர்கள் புறக்கணித்த கல், கட்டுவதற்கு ஆவதில்லை!


ஆனால், புறக்கணிக்கப்பட்ட நீங்கள் 'இது, கர்த்தரின் செயல்!' என மகிழ்வுடன் ஏற்று குரு சென்ற 'சிலுவையின் வழியில்' பின்தொடர்வதால், உங்களை வைத்தே, தன் வீட்டைக் கட்டுவார்! நம் கண்களுக்கு முன்பாக நடைபெறும் இந்த ஆச்சரியம், நம் குடும்பம் கட்டப்பட, சபை கட்டப்பட நிலைத்திருப்பதாக! (மத்தேயு 21:42).

*-tr*

செப்டம்பர் 2019

பெட்டகம் 21

பரல்கள் 9



## தனி ஜெபமின்றி, ஜெயவாழ்வு இல்லை!

தன் ஆத்துமா கலங்கிய வேளையில், தன் சீஷர்களோடு ஜெபித்திட இயேசு கெத்சமனே சென்ற போதிலும் கல்லெறி தூரம் விலகி, தனித்தே ஜெபித்தார். தன் பிதாவை சந்தித்து, சுய சித்தம் ஒழித்து... கெம்பீரமாய் கொல்கொதா மலையேறி வெற்றி சிறந்தார்! (லூக்கா 22:41, 42)

தனிமையில், தேவனை ஜெபத்தில் சந்திக்காத கிறிஸ்தவ வாழ்வில் ஜெயம் இருப்பதில்லை. "இவ்வகை பிசாசு ஜெபத்தினாலும், உபவாசத்தினாலுமேயன்றி வேறு எவ்விதத்தினாலும் புறப்பட்டு போகாது" என்றார் இயேசு (மத்தேயு 17:21). மிகுதியான நளத தைலத்தை சில செத்த ஈக்கள் நாறச் செய்துவிடும்(பிர.10:1). மேலும் "இதோ உலகத்தின் அதிபதி வருகிறான். அவனுக்கு என்னிடத்தில் ஒன்றுமில்லை" என இயேசு கூறினார்! (யோவான் 14:30).

ஆகவே, உங்கள் ஜீவியத்தில் ஒரு பாவம் ஜெயிக்கப்படாமல் இருந்தாலும், அது தோல்வியின் ஜீவியம் என்பதை மறந்து விடாதீர்கள். பாவத்தை ஜெயித்து வாழாமல், தெய்வ கிருபையின் ஆளுகையில் இருப்பதை நாம் நிரூபித்திட முடியாது. முற்றிலும் ஜெயம் என்பதே பரலோக ராஜ்ஜியத்தின் நிரந்தர தரமாகும் (ரோ.8:37). ஆகவே இயேசு தனிமையில், பலத்த சத்தத்தோடும், கண்ணீரோடும் ஜெபித்திட்ட ஜீவியம் நமக்கு இராவிட்டால், ஜெய வாழ்வு இல்லை! அதை அறிந்து, ஜெபமாந்தர்கள் நிறைந்த சபையாய் நாம் திகழ்வோமாக!

*-Ed*


'பரலோக பொக்கிஷங்கள்' வருடசந்தா ரூ.150.00
ஒரே விலாசத்தில் 3 பிரதிக்கு மேல் வீதம் ரூ.125.00 அயல்நாட்டு சந்தா ரூ.900.00

ஆவிக்குரிய விழிப்பூட்டும்! அனல் குன்றா வழிகாட்டும்! அசல் உயர்த்தி போலி அகற்றும்!
சமரசம் மறுத்து சத்தியம் பேசும்! குருவின் அடிச்சுவடில் சீஷர்களை எழுப்பும்!

வங்கிகணக்கு: **MADURAI CHRISTIAN FELLOWSHIP,** IndianBank-Koodal Nagar Branch,
A/c no: **502087685** IFSC Code: **IDIB000K150** (வங்கியில் செலுத்தியபின், உங்கள் விலாச தகவல் தெரிவிக்கவும்)



கடித தொடர்பு : பரலோக பொக்கிஷங்கள், 207A- Zaheer Husain Street, Koodal Nagar,
(Thathaneri P.O.), MADURAI - 625 018, S.India. Cell: 9843049935 Ph (O) 0452 - 2662306,
**Email: rathnakumar.t@gmail.com** *தமிழ்வலைதளம்*: **paralogapokkishangal.com, tamil.cfcindia.com**
**You Tube : paralogapokkishangal**

## 'பாபிலோன் ஆவிக்கு' விலகி வாழும் மணவாட்டி சபை!

**வெ**ளிப்படுத்தின விசேஷம் 17-ம் அதிகாரத்தில், பாபிலோன் 'மகா பாபிலோன்' என அழைக்கப்படுவதை வாசிக்கிறோம். இவ்வாறு **'மகா பாபிலோன்'** என அழைக்கப்படுவதை வெளிப்படுத்தின விசேஷ புஸ்தகத்தில் பதினொரு முறை காண்கிறோம். இதற்கு மாறாக எருசலேமோ, **'பரிசுத்த நகரம்'** என்றே அழைக்கப்படுகிறது (வெளி.21:2). 'மகா பெரிய' என்பதற்கும் 'பரிசுத்தம்' என்பதற்கும் உள்ள வித்தியாசம் அளவிற்கும், தரத்திற்கும் உள்ள வித்தியாசமாயிருக்கிறது.

**ஆகவே பாபிலோனுக்கும் எருசலேமுக்கும் உள்ள பிரதான வித்தியாசம், தரமேயாகும்! நீங்கள் மகா பெரிதாயிருக்கவோ? அல்லது பரிசுத்த நிறைவாயிருக்கவோ? எதை நாடுகிறீர்கள்? இதை அடிப்படையாகக் கொண்டே, நீங்கள் பாபிலோனைக் கட்டுகிறீர்களா? அல்லது எருசலேமைக் கட்டுகிறீர்களா? என்பதை தீர்மானிக்க முடியும்!**

நீங்கள் வைத்திருக்கும் உபதேசங்கள் சுவிசேஷத்திற்குரிய தரத்தின்படி சரியாக இருந்தாலும், இந்த உலகத்தில் நீங்கள் 'மகா பெரியவர்களாய்' இருக்க நாடினாலோ அல்லது கிறிஸ்தவ உலகிற்கு உங்களை 'மகா மேன்மையாய் வைத்துக் கொள்ள' நாடினாலோ, நீங்கள் பாபிலோனை மாத்திரமே கட்டுவீர்கள்! உண்மை என்ன வென்றால், நீங்கள் பரிசுத்தத்தின் மீது அதிக வாஞ்சை கொண்ட வர்களாயிருந்தால், உங்களால் மகா மேன்மை கொண்டவர்களாய் இருக்க இயலாது.... மாறாக, நீங்களோ எருசலேமைக் கட்டுவீர்கள்! "இந்த தெரிந்து கொள்ளுதலே" இன்றைய கிறிஸ்தவ ஊழியர் களுக்கு முன்பாக வைக்கப்பட்டிருக்கிறது! **எண்ணிக்கையையா? அல்லது தரத்தையா?** எதை நாம் தேடப்போகிறோம்? நம்முடைய தரத்தை நாம் குறைத்துக் கொண்டால், 'அதிகமான ஜனத்தை' நாம் கூட்டிச்சேர்த்துவிட முடியும்! ஆனால் நாமோ, அவர்கள் அனைவரையும் நரகத்திற்கே நடத்திச் செல்வோம். 120 வருட ஊழியத்திற்கு பிறகு, நோவா தன்னுடைய சபையில் எட்டு ஜனங்களை மாத்திரமே வைத்திருந்தார். அதுஏனென்றால் "அவர் ஒரு நீதியின் பிரசங்கியாய்" இருந்தார்! தன்னுடைய இந்த தரத்தை அவர் ஒருபோதும் குறைக்கவில்லை (2பேதுரு 2:5).

*இதற்கு மாறாக நோவா தன்னுடைய தரத்தை குறைத்திருந்தால், அவர் தன்னுடைய சபையில் 800பேர்களையோ அல்லது 8000 பேர்களையோ கூட்டிச் சேர்த்திருக்க முடியும். அப்படியிருந்திருக்கு மானால், நோவா உட்பட எல்லோருமே அந்த வெள்ளத்தில் மூழ்கி இருப்பார்கள். ஒருவர்கூட இரட்சிக்கப்பட்டிருக்க முடியாது! ஆனால், எண்ணிக்கையை ஒருபோதும் நாடாமல், தரத்தை வலியுறுத்திய நோவாவிற்காக தேவனுக்கு துதி உண்டாகட்டும்! அதன் விளைவாய், தன்னோடு இருந்த எட்டு பேர்களையும் அவர் இரட்சித்து காத்துக் கொண்டார்!*

**நீங்கள், மனம் மாறியவர்களை மாத்திரமே கிறிஸ்தவத்திற்கு கொண்டு வந்து, அவர்களை இயேசுவின் சீஷர்களாக்காதிருந்தால், உங்கள் சபையில் ஏராளமான பேர் இருப்பார்கள்! ஆனால், அவர்களோ பாபிலோனுக்கும் பங்காளிகளாயிருப்பார்கள்.... முடிவில், தேவன் அவர்களை அழித்துப் போடுவார்!**

*இந்த பாபிலோனிய ஆவி, குறைந்தது சில கிறிஸ்தவர்களிடத்தி லாவது, ஒவ்வொரு கிறிஸ்தவ குழுக்களிலும் இருப்பதைக் கண்டிருக்கிறேன். இதற்கு, எந்த ஒரு ஸ்தாபனமும் அல்லது சபையும் விதி விலக்கல்ல! இந்த உலக ஆவியை, சபையை விட்டு விலக்கி வைத்திருக்க வேண்டுமென்றால், அந்த சபையின் தலைவன் ஓர் தொடர்ச்சியான கடும்போராட்டம் செய்தாக வேண்டும். ஒத்துப்போக இணங்கும் ஆவி, உலகத்தின் ஈர்ப்பு, இந்த உலகத்திலுள்ள ஆஸ்தியையும் கனத்தையும் தேடும் விருப்பங்கள், ஆகிய இவைகள் கிறிஸ்தவர்களுக்குள் மிக எளிதில் வந்து விடமுடியும். அப்படி சம்பவித்து விட்டால், அவன் இயேசுவின் சீஷனாய் தொடர்ந்து இருக்க இயலாது.* **நீங்கள் மனுஷர்களைப் பிரியப்படுத்த நாடியவுடன்,** *தேவனைப் பிரியப்படுத்த முடியாத இடத்திற்குச் சென்று விடுவீர்கள். மேலும், நீங்கள் ஒரு சபையிலிருந்து மற்றொரு சபைக்குச் சென்று விட்டால் 'பாபிலோன் ஆவியிலிருந்து தப்பிக்கலாம்' எனவும் எண்ணாதீர்கள். அநேக புராட்டஸ்டண்டு, பெந்தெகொஸ்தேயினர் சொல்வதெல்லாம் "ரோமன் கத்தோலிக்க சபை, பாபிலோன்!" என கூறுகிறார்கள். ஆனால் "பாபிலோன் ஆவி" புராட்டஸ்டண்டு விசுவாசிகளிடமும் பெந்தெகொஸ்தே விசுவாசிகளிடமும் இருக்கிறது! குறிப்பாக, அவர்களின் தலைவர்களிடம் கூட இருக்கிறது! இந்த ரோமன் கத்தோலிக்க பாதிரியார்களைக் காட்டிலும், அங்குள்ள தலைவர்கள் பணத்திற்காக மோகத்துடன் நாடி ஓடுகிறார்கள்!*

*ஆகவே, பாபிலோன் என்பது, ஒரு குறிப்பிட்ட குழுவோ அல்லது*

*ஒரு குறிப்பிட்ட ஸ்தாபனமோ அல்ல! அது ஒரு 'மதவாத முறைமையாகும்!'. சாத்தானுக்கென்று உலக-முறைமை இருப்பதைப் போலவே, மதவாத - முறைமையும், ஊடுருவிச் சென்று எல்லா கிறிஸ்தவ குழுக்களையும் கறைப்படுத்த முயலுகிறது. எனவேதான், இந்த உலகிலுள்ள மகா பரிசுத்தமுள்ள ஒரு சபையில் நீங்கள் அமர்ந்து கொண்டே, பாபிலோனின் ஒரு அங்கமாய் இருந்திடமுடியும்! இது, கிறிஸ்துவையும் பணத்தையும் ஒன்றர கலந்து வைக்க முயற்சிக்கும் ஆவியாகும்! கிறிஸ்துவையும் உலக சொகுசையும் ஒன்றர கலந்திடச் செய்கிறது. ஏன், பரலோகத்தையும் உலகத்தோடு கலந்திட முயற்சி செய்கிறது! எவ்வளவு கலந்தாலும் இவைகள் ஒன்றுக்கு ஒன்று முரணாய் இருக்கிறபடியினால் எண்ணெயும் தண்ணீரையும் போல சேர்ந்திருக்க முடியாது!*

**இந்த பாபிலோன் ஆவிக்கு நீங்கள் தப்புவதற்கு ஒரே வழி, நீங்கள் தொடர்ச்சியாய் உங்கள் மாம்சத்தை மரணத்திற்கு கொண்டு வருவதேயாகும்!**

*வெளி.18-ம் அதிகாரத்தில், பாபிலோன் 'பொருளாதார முறைமை' கொண்டதாய் இருப்பதை காண்கிறோம். கிறிஸ்தவ மார்க்கம், இன்று அநேக ஜனங்களுக்கு 'பணம் சம்பாதிக்கும்' மிகப் பெரும் சாதகமாய் மாறி விட்டது. இயேசுவின் நாட்களில், உலகத்தை நாடிய யூதர்கள், ஆலயத்தில் புறாக்களையும், ஆடுகளையும் விற்றார்கள்.* **அது, ஜனங்களுக்கு ஊழியம் செய்வதற்காக அல்லாமல், தங்களுக்கு ஆதாயம் தேடும்படியே அவ்வாறு செய்தார்கள்.** *நீங்கள் எப்போதெல்லாம், கிறிஸ்தவ ஊழியத்தை உங்கள் சொந்த தியாகமாய் செய்யாமல், சொந்த ஆதாயத்திற்காக செய்வீர்களென்றால், நீங்கள் பாபிலோன் ஆவியில் முன்னோக்கிச் செல்கிறீர்கள் என்று அறிந்து கொள்ளுங்கள். இன்றைய கிறிஸ்தவ உலகில், ஏராளமான பிரசங்கிகள் புத்தகங்கள் எழுதி, வீடியோக்கள் தயாரித்து, தங்களுக்கென 'உரிமத்தை' பெரும் தொகையாய் சம்பாதிக்கிறார்கள். இவர்கள் கர்த்தருடைய நாமத்தில் ஊழியம் செய்து, தங்களுக்காகவே பணம் சேர்க்கிறார்கள்! இதுவே, பாபிலோனின் ஆவியாகும். கிறிஸ்மஸ் பண்டிகையை சற்று எண்ணிப் பாருங்கள். கிறிஸ்மஸ் வாழ்த்து அட்டைகளை விற்றும், கிறிஸ்மஸ் பரிசு பொருட்களை விற்றும் கடை வியாபாரிகள் ஏராளமாய் சம்பாதிக்கிறார்கள்.*

**தேவனுடைய உத்தம தீர்க்கதரிசிகளோ, கறைப்பட்டுப்போன இந்த முறைமைகளுக்கு எதிர்த்து நின்று, "நம்முடைய ஆண்டவரும், அப்போஸ்தலர்களும் சென்ற வழி இது அல்ல!" என முழங்கி நிற்பார்கள்.**

*கர்த்தருக்கு ஊழியம் செய்கிறவர்கள், மற்றவர்கள் மனப்பூர்வமாய்*

அளித்திடும் அன்பான காணிக்கைகளை பெற்றுக் கொள்ள முடியுமென புதிய ஏற்பாடு போதிப்பது உண்மைதான்! ஆனால் நீங்களோ, கிறிஸ்தவ ஊழியம் செய்து, அன்று நீங்கள் உலக அலுவலில் பெற்ற சம்பாத்தியத்தை விட உங்கள் ஊழியத்தின் மூலமாய் அதிகம் சம்பாதித்தால், நீங்களும் 'பாபிலோன் ஆவியினால்' கறைப்பட்டீர்கள் என்பதை அறிந்துகொள்ளுங்கள்! திரளான கிறிஸ்தவ ஊழியங்கள், அவர்கள் உலக அலுவலில் சம்பாதித்ததை விட ஐந்து மடங்கு அதிகமாய், இன்னும் பலர் பத்து மடங்கு அதிகமாய் சம்பாத்தியம் செய்கிறார்கள். அவர்கள் கர்த்தருக்கு ஊழியம் செய்யவில்லை! அவர்கள் தங்களுக்கே ஊழியம் செய்து கொண்டார்கள். நான் இப்படியெல்லாம் **சத்தியத்தை பகிரங்கமாய் பேசுகிறபடியால்,** ஏராளமான பிரசங்கிகளும் பாஸ்டர்களும் என்மீது கோபம் அடைகிறார்கள்! ஆனால் தேவனுடைய நாமத்தில் ஆலயத்தில் சம்பாதித்த ஆசாரியர்களை "இயேசு பகிரங்கப்படுத்திய போது" அவர்களும் இயேசுவை பகைத்தார்கள்! இப்போது, அதே காரணங்களுக்காக ஜனங்கள் என்னையும் பகைத்தால், அதை நான் ஏற்றுக்கொள்கிறேன்!

இந்த பாபிலோன் வழியில் செல்லும் அனைவரும் 'கடைசி நாளில்' வெகுவாய் துயரம் அடைவார்கள்! தேவனுடைய வழி, தியாக வழியாகும்! எருசலேம், 'பலி செலுத்தும்' நகரமாய் திகழ்ந்தது! பண்டை காலத்திலிருந்த எருசலேம் ஆலயத்திற்கு நீங்கள் சென்றிருந்தால், ஆலயத்தின் வெளிப்பிரகாரம் முழுவதும் இரத்தம் கொட்டியிருப்பதை காண்பீர்கள்.

**ஆலயம், பலி செலுத்தும் ஸ்தலம்! பாபிலோன், ஓர் வியாபார ஸ்தலம்! இயேசுவை பின்பற்றி அவருக்கு ஊழியம் செய்வது 'தியாக வழி' செல்வதாகும்! அது, தனக்கென்று பண ஆதாயமோ அல்லது கனத்தை தேடும் ஆதாய வழியோ அல்லவே அல்ல!**

ஒரு நாளில், "இந்த பொருளாதார மார்க்க முறைமையும்" அதை ஆதரித்துக் கட்டுவதற்கு முயற்சித்த அனைவரையும் தேவன் அழித்துப் போடுவார்! ஆகவேதான் தம்முடைய ஜனங்களை ஆண்டவர் இன்றே அழைப்பு விடுத்து "**என் ஜனங்களே, பாபிலோனை விட்டு வெளியே வாருங்கள்!** அவர்களுடைய பாவங்களுக்கு உடன்படாதிருங்கள்! அப்படி இல்லையென்றால் அவர்களோடு சேர்ந்து நீங்களும் அகப்பட்டு தண்டிக்கப்படுவீர்கள். ஏனெனில் அவர்களுடைய பாவம் வானபரியந்தம் குவிக்கப்பட்டு அவர்களுடைய அநியாயங்களை தேவன் நியாயந்தீர்க்கும் காலம் வந்து விட்டது!" (வெளி. 18:4,5-Living)என்றே வேதம் கூறுகிறது.

*இன்று அநேகர், அர்த்தமில்லாமலே "அல்லேலூயா" எனக் கூறுகிறார்கள். ஆனால் பரலோகத்திலோ, ஒரு காரணத்தை முன்வைத்தே 'அல்லேலூயா' கூறினார்கள்.* **உரத்த சத்தமிட்டு மூன்று முறை "அல்லேலூயா" சொன்னதற்கு காரணம், பாபிலோன் முற்றிலும் அழிக்கப்பட்டது!** *என்ற காரணமேயாகும் (வெளி.19:1-4).*

*இன்று, நீங்களும் அவர்களோடு சேர்ந்து "அல்லேலூயா! ஆண்டவரே, பணத்தை சம்பாதித்து, சொகுசு நாடும் கிறிஸ்தவத்தை வைத்து ஏராளமான ஜனங்களை வழிதப்பிச் செல்ல நடத்திய இந்த அருவருப்பான முறைமைகளை நீர் அழிக்கப்போகிறீர்!" என சேர்ந்து ஆர்ப்பரிக்க உங்களால் கூடுமா?*

*நான்காவது தடவையாக "அல்லேலூயா" என அவர்கள் முழங்கியதற்கு காரணம் "தேவனாகிய கர்த்தர் இராஜ்ஜியபாரம் பண்ணுகிறார்! ஆட்டுக்குட்டியானவருடைய கல்யாணம் வந்தது! அவருடைய மனைவி தன்னை ஆயத்தம் பண்ணினாள்" என்ற காரணமேயாகும் (வெளி.19:6,7). ஆண்டவர், கிறிஸ்துவின் மணவாட்டியை 'பரிசுத்தமுள்ளவளாய்' இந்த பூமியில் இன்று ஆயத்தம் செய்வதும், மற்றொரு அல்லேலூயா முழக்கத்திற்கு காரணமாயிருந்தது.*

> *பாபிலோனின் ஆவியிலிருந்து தன்னை சுத்திகரித்துக் கொண்டதே கிறிஸ்துவின் சரீரத்திற்குரிய ஆயத்தமாயிருக்கிறது. அவள் சுத்தமும், பிரகாசமுள்ள மெல்லிய வஸ்திரமும் உடுத்தியிருந்தாள். அவள் உடுத்தியிருந்த இவைகளைத்தவிர "யாதொரு தங்கமும்" இடம் பெறவில்லை!*

*தன்னை ஆயத்தம் செய்து கொண்ட இந்த விசுவாசிகள், வசனத்தின்படி நீதியுள்ள வாழ்க்கை வாழ்ந்தார்கள் என்பதை இது குறிப்பிடுகிறது. இது, 'கிறிஸ்துவின் நீதி அல்ல' மாறாக "பரிசுத்தவான்களுடைய நீதியேயாகும்" (வெளி.19:8). இந்த தூய வெண்மையான உடுப்பானது, பாபிலோன் வேசி உடுத்தியிருந்த ஆடம்பர நிறமான இரத்தாம்பரமும் சிவப்புமான ஆடைக்கும், பொன், இரத்தினங்கள், முத்துக்கள் போன்ற சிங்கார அலங்கரிப்பிற்கும் முற்றிலும் மாறுபட்டதாயிருந்தது! (வெளி.17:4). நாமும், நம்முடைய சபையும் எவ்வளவு தீவிரமாய் உலகத்தையும், அதிலுண்டான பாபிலோன் மகிமையையும், துச்சமென புறக்கணித்து வாழ்கிறோமோ, அந்த அளவிற்கு "மணவாட்டி" தெய்வீக சௌந்தர்யம் நிறைந்தவளாய் கிறிஸ்துவுக்கு ஆயத்தம் கொண்டிருப்பாள்!*

*– சகரியா பூணன்*

**'ஜெப ஜீவியத்தில் பழகாதவர்கள்' தீங்கு செய்வது இயல்பு!**

*அரண்மனையை விட்டு நான் வெளியே சென்ற பிறகு, என் மாமியாரோடு ஒப்புரவாக முயற்சித்த எல்லா முயற்சிகளும் வீணானபடியால், ஒரு கிறிஸ்மஸ் பண்டிகையினிமித்தம் அவர்களிடம் சென்றேன். பண்டிகை காலமதால், நான் அரண்மனை வீட்டுக்கு வந்ததை 'ஆட்சேபிக்க' அவர்களால் முடியவில்லை. அந்த தக்கத் தருணத்தில், நான் மிகுந்த அன்புடன் என் மாமியாரைப் பார்த்து "என் அன்னையே, இன்று 'சமாதான பிரபு' எல்லோருக்கும் சமாதானம் கொண்டு வர பிறந்துள்ளார்! இந்த நாளில் அந்த சமாதானத்தை நமக்கும் தருவார். "***அவருடைய நாமத்தில், உங்கள் சமாதானத்தை நான் நாடுகிறேன்***" *எனக் கேட்டேன். நான் கூறிய வார்த்தைகளை, அவர்கள் ஏற்றுக்கொண்டதைப்போல் தோன்றியது. ஆகிலும் அதை அவர்கள் வெளிக்காட்டவில்லை.*

*எங்களோடு சம்பாஷிக்க வரும் 'கத்தோலிக்க பிரசங்கி அம்மையார்' வழக்கம் போல் சமாதானத்தையும் ஆறுதலையும் பெலப்படுத்துவதற்குப் பதிலாக, என்னை துன்புறுத்தும்படி "நீ இப்படியெல்லாம் அரண்மனையை விட்டு நீயாகவே வெளியே போனது நியாயமானதல்ல" என சாடினார்கள். என் மாமியார் எப்போதெல்லாம் அரண்மனை வேலைக்காரர்கள் சிலரை "வெளியே அனுப்பப்படுவீர்கள்!" என எச்சரிக்கிறாரோ, அதை ஆமோதித்து இந்த பிரசங்கி அம்மையார் பேசுவார்கள். அதைக்கேட்டு மற்ற அரண்மனை பணியாட்கள் வருந்துவதுண்டு!*

*என் மாமியாரோடு ஒப்புரவாகிட தோல்வியுற்ற இந்த சமயத்தில், அங்கிருந்த எங்கள் உறவின தனவான், எப்படியாகிலும் என்னை மீண்டும் அரண்மனைக்கு கொண்டு வர விரும்பினார். நானும் அந்த தனவானுடைய தெய்வ பக்தியை அறிந்து மதிப்பதுண்டு. அந்த தனவான், என் மாமியாருடைய கடினப் போக்கை அறிந்தபடியால், அவர்களிடம் மெதுவாக பேசத் தொடங்கினார். அவர் உள்ளத்திலிருந்த ஒரு பெரிய வருத்தம் என்னவெனில், அரண்மனையைச் சுற்றியுள்ள எளியோர்களை நான் சந்தித்து செய்திடும் பொருளுதவி நின்று விட்டதை அறிந்து, மனம் வருந்தி, நான் மீண்டும் அரண்மனை வந்திட பிரயாசப்பட்டதை நான் காண முடிந்தது. அவர் ஒரு தனவானாயிருந்தாலும், என் மாமியாரின் குணம் அறிந்து வெகு தாழ்மையாய் பேசியதைக் கண்டு ஆச்சரியப்பட்டேன்.*

*ஆனால் என் மாமியாரோ, "நான் எப்பொழுது அவளை வெளியே போகச் சொன்னேன்? அவளாக வெளியே சென்றால் அதை நான் தடுத்து நிறுத்த மாட்டேன்!" என முற்றுப்புள்ளி வைத்துபேசி விட்டார்கள். அந்த தனவந்தர் என்னை தனியாக சந்தித்து "உன் மாமியார் சொன்னதை கேட்டாயல்லவா? நீ அவர்களை பிரியப்படுத்த இன்னும் ஒரு முறை சென்று மன்னிப்பு கேட்கலாமே" என வருந்தி கேட்டார். அதற்கு நான் "தனவான் அவர்களே, ஒரு முறை என்ன நூறு முறை சென்று கேட்கவும் விருப்பமாயிருக்கிறேன்" என கூறி என் மாமியாரிடம் சென்றேன்.*

இச்சமயம், எனக்குள் நான் கண்டதெல்லாம் "என்ன காரணத்திற்காக அவர்கள் என்னிடம் இவ்வாறெல்லாம் நடந்து கொள்கிறார்கள்?" என்பதற்குரிய காரணம், இன்று வரை 'எனக்குத் தெரியாது' என்பதுதான்! அவர்கள் மனதை, என்னைக் குறித்த விஷயத்தில் 'எது சஞ்சலப்படுத்தியது?' என்பதும் எனக்குத் தெரியாது!

*மேலும், பல முயற்சிக்குப் பிறகு நான் முடிவாக அறிந்து கொண்டதெல்லாம், என் சார்பில் யாதொரு குறை சொல்லும் அவர்களைக் குறித்து என்னிடத்தில் இல்லை! என்பதுதான். ஆகவே, நான் அவர்களோடு கூட தொடர்ந்து இருப்பது, அவர்களுக்கு வலி ஏற்படுத்துகிறது என அறிந்து 'அரண்மனையை விட்டு நான் வெளியே செல்வது' அவர்களின் குறுக்கே இருந்த தொந்தரவு நீங்கியதாக இருக்கட்டும்! என கர்த்தருக்கு முன்பாக முடிவு செய்தே.... நான் அரண்மனையை விட்டு வெளியேறினேன்.*

*இருப்பினும், மற்றொரு சந்தர்ப்பமாக, அந்த தனவானோடு என் மாமியாரின் அறைக்குள் பிரவேசித்தேன். அவர்களிடம்: "கனம் பொருந்திய அன்னையே, நான் ஏதாவது உங்களுக்கு பிரியமில்லாததை செய்திருந்தால் அதை தயவாய் எனக்கு மன்னியுங்கள். அதை நிச்சயமாய், எந்த உள்நோக்கத்தோடும் அறிந்து நான் செய்திருக்க முடியாது. இருப்பினும் நான் உங்களிடம் விரும்பி கேட்பதெல்லாம் யாதொரு தீமையும் என் மூலம் நடந்திருந்தால் அதை எனக்குத் தயவாய் கூறுங்கள்" என வேண்டினேன். இவ்வாறு நான் கூறியதைக் கேட்ட அந்த தனவந்தர் மிகுந்த ஆச்சரியமடைந்தார்!*

*இச்சமயம், தேவன் தம்முடைய ஆளுகையில் அனுமதித்து, என் மாமியாரின் உள்ளத்திலுள்ள உண்மையை பேசும்படி செய்தார்:* **அவர்கள் பேச ஆரம்பித்து, "என் மருமகள் எளிதில் மனம் புண்பட்டு போகிறவள் அல்ல, அவளுக்கு என்மீது யாதொரு புகாரும் இல்லை! உண்மை என்னவென்றால், நான் அவளை நேசிக்கவில்லை! அவள் செத்து விட்டால் கூட நலம்! என்று என் உள்ளம் கூறுகிறது"** *என அந்த தனவந்தவரை முன்*

வைத்து கூறி விட்டார்கள். மனம் வருந்திய நான் அவர்களுக்குப் பதில் கூறியதெல்லாம்: "நீங்கள் வைத்திருக்கும் சிந்தைக்கு முற்றிலும் எதிர்முனையில் என் இருதயம் உள்ளது. நான் அரண்மனையில் இருந்த காலமெல்லாம் பல பணிவிடைகள் உங்களுக்குச் செய்து **'நீங்கள் நீடூழி காலம் வாழ வேண்டும்!' என்ற ஒரே விருப்பம் தவிர, வேறொரு விருப்பம் என் உள்ளத்தில் இருந்ததில்லை** என அன்புடன் பதில் அளித்தேன். உண்மை பூர்வமாய், நான் அவர்கள் மீது வைத்திருந்த பாசம் மெய்யானது! ஆனால் அதை அவர்கள் நம்பும்படி பின்தொடர என்னால் முடியவில்லை.

> நான் எவ்வளவு நலமாய் அவர்களிடம் பேசினாலும் "என்னை விரோதித்துப் பேசும் சில பணிப்பெண்களின் வார்த்தைகளைக் கேட்டு" என்னை மீண்டும் பகைத்தார்கள்!

**எந்த முகாந்தரமும் இன்றி,** அரண்மனை பணிப்பெண்களில் ஒருத்தி, மிகக்கொடிய பகையை என்மீது கொண்டிருந்தாள்! நான் ஒரு இளவரச குடும்ப பெண்மணி என்ற எண்ணம் துளியும் இல்லாமல் அவமரியாதை செய்வாள். நான் நின்று கொண்டிருக்கும் இடத்தில், வேகமாய் மோதி, என்னை கீழே தள்ளி விடுவாள்! இதுபோலவே, ஆலயத்திற்குள் நான் செல்லும்போதும், வழியை அடைத்து கொண்டு நிற்பவர்களை தள்ளுவது போல், இந்தப் பணிப்பெண் மிகுந்த ஆக்ரோஷமாய் என்னை கீழே தள்ளிவிடுவாள். பலமுறை, என் அறைக்குள் வந்து, **எந்த காரணமுமில்லாமல்** தூஷண வார்த்தைகளால் என்னை அவள் திட்டுவது உண்டு!

நானோ, ஒருபோதும் யாதொரு குறையை ஒருவரிடமும் சொன்னதில்லை! அது ஏனென்றால், இதுபோன்ற அவர்களுடைய சுபாவம் ஒரு நாளில் அவளுக்கே தீங்காய் முடியும்! என்பதை அவள் அறியாதிருந்தாள்!

என் மாமியாரோ, நான் வேண்டிக் கொண்ட எதையும் கேட்க மறுத்தபடியால், நான் என்னுடைய வாடகை ஸ்தலத்திற்கு செல்லும்படி வருத்தமுடன் திரும்பினேன். அச்சமயம் எதிர்வந்த இந்த பணிப்பெண்ணை நான் அன்புடன் கட்டித்தழுவினேன்! பணிப் பெண்ணோ, என் மாமியாரிடம் "இவள் என்னை கட்டித் தழுவும் கொடுமையைப் பாருங்கள்" என புகார் செய்தாள். இந்த முறை என் கண் முன்பாக நடந்த வித்தை என்னவெனில்: என் மாமியார் மிகுந்த கோபத்துடன் பணிப்பெண்ணை பார்த்து "அரண்மனையை விட்டு உடனே வெளியே போ" என உத்தரவிட்டார்கள். இங்கே நான் கூற விரும்புவதெல்லாம், என் மாமியாரிடம் நல்ல குணங்களும் இருக்கத்தான் செய்தது!

"ஜெப ஜீவியத்தில் அவர்களுக்கு பழக்கம் இல்லாதபடியால்" இவ்வித மனக்கடினம் ஏற்படுவது சகஜமே! என நான் அறிந்தேன். ஜெப ஜீவியத்தில் பழகி வாழ்ந்த நானோ, என் நிலை உணர்ந்தவளாய் "ஒரு வேளை நானே அறியாமல் அநேக சிலுவைகளை என் மாமியாருக்குத் தந்திருக்க முடியும்! அவர்களும் தாங்கள் செய்வது இன்னதென்று அறியாமலே, எனக்கு தீங்கு செய்திருக்கக் கூடும்" என எண்ணிக் கொண்டேன்.

இவ்வாறு நான் எழுதுவதை, நிகழ்ச்சிக்குரியவர்கள் யாராகிலும் அறிந்து மனம் புண்பட்டு விடக்கூடாது என்றே நம்புகிறேன். அது ஏனென்றால் "இது போன்ற நிகழ்வுகளை வைத்து சுயசரிதை எழுதுவது "**தேவனுக்குரிய விஷயங்களாக**" நாம் காண்பதே நம்முடைய பக்தி விருத்திக்கும், வளர்ச்சிக்கும் நலமாகும்!

– மேடம் குயான்

---

## 'விசுவாசத்திற்கு கீழ்ப்படியும்' இரகசியம்!

**வி**சுவாசம் என்ற விலையேறப்பெற்ற **பரத்தின் தொடர்பை,** அநேகர் மாற்றி அமைத்து, **மண்ணுக்குரியவைகளுக்கு** அதை இணைத்துவிட துடிக்கிறார்கள். இன்றைய சபைகளிலும், சபைகளில் உள்ள தலைவர்களுக்கும் அங்கு அமர்ந்திருக்கும் எளிய ஜனங்களுக்கும் இதுபோன்ற நிலை ஏற்படுவது மிகக் கொடியது என்றே கூற வேண்டும். மெய்யான விசுவாசம் "தேவனுடைய சுபாவத்தை" மையமாய் கொண்டதாகும். அவருடைய சுபாவத்திற்கு ஒப்பாக மாறும் மறுரூபத்திற்கே பரத்தின் விசுவாசம் கைகொடுக்கிறது!

தன் பரிபூரணத்தை, அவர் தருவேன் என வாக்குரைத்து விட்டால், ஒருபோதும் பொய் சொல்லாத அவர், நிச்சயமாய் நமக்குத் தருவார்!

என்பதே பிழையற்ற விசுவாசமாகும். அந்த நித்திய ஜீவனையே பரம பிதாவும், அவர் தந்தருளிய இயேசு கிறிஸ்துவும் நமக்கு வெளிப்படுத்தியிருக்கிறார்கள். இந்த ஜீவனை ஆதாரமாகக் கொண்டே பரிசுத்தாவியானவரும் நமக்கு அருளப்பட்டிருக்கிறார். ஒரு காசுக்கு இரண்டு பக்கத்தைப்போல, கிறிஸ்து மெய்யாகவே "உங்கள் சொந்த இரட்சகராக" இருந்தால், மறுபக்கத்தில் ஜீவனுக்குள் நடத்தும் அவருடைய கற்பனைகளுக்கு கீழ்ப்படிந்திருப்பீர்கள்!

இவ்வாறாக மீட்கப்பட்ட ஒரு கிறிஸ்தவன் "**விசுவாசிப்பதும் கீழ்ப்படிவதும்**" அவனைவிட்டு பிரிக்க முடியாத பங்காய் மாறிவிடும். கீழ்ப்படியும் இருதயம் கொண்ட ஒருவனுக்கே, தேவன் தம்முடைய விலையேறப்பெற்ற விசுவாசத்தைத் தருகிறார். அந்த கீழ்ப்படிதலுக்கு முதுகெலும்பாய் நிற்பது "மனந்திரும்புதல்" என்பதை மறந்து

விடாதீர்கள். **இவ்வாறு மனந்திரும்பி நொறுங்குண்டவனிடத்தில் மாத்திரமே, கீழ்ப்படிதல் என்னும் கிறிஸ்துவின் நற்கந்தம் தங்கி இருக்கும்.**

தெய்வ விசுவாசத்தில், சகலமும் நாமே செய்ய வேண்டும் என்பது இல்லை! விசுவாசம் கொண்ட தம்முடையவர்களுக்கு, தேவனே முன் வந்து ஒன்பது அடிகள் நடந்து வருகிறார். அந்த நற்பொருளாகிய விசுவாசம் கொண்டவன் எடுத்து வைக்க வேண்டிய கீழ்ப்படிதல், அந்த பத்தாவது அடியேயாகும். 'அந்த குறைந்த பத்தாவது அடி, விசுவாச பந்தம் கொண்டவர்களுக்கே உரியது. அஞ்ஞான மார்க்கவாதிகள் 'தாங்களே முயற்சிப்பது' பக்தி என எண்ணிக்கொள்ளுகிறார்கள். இதிலிருந்து விலகியதைப்போல் தோன்றும் கிறிஸ்தவ விசுவாசிகளோ, 'சகலமும் தேவனே செய்து விடுவார்' என்ற **'கிரியை இல்லாத –விசுவாச குழியில்'** விழுகிறார்கள்! மரணபரியந்தமும் கீழ்ப்படிந்து வாழும் வாழ்க்கை கிறிஸ்துவுக்குள் மிக எளியதேயாகும். ஒன்பதாவது அடியை அவர் நமக்காக நடந்து முடித்தாலும், அந்த கடைசி பத்தாவது அடியை அவர் ஒருபோதும் நடக்க மாட்டார். அவருக்குச் சொந்த மானவர்கள், காலமெல்லாம் அவருக்கு கீழ்ப்படிந்து வாழ்கிறபடியால் தங்களுடைய கீழ்ப்படிதல் மிக சொற்பமான 'பத்தாவது அடி' என்பதை அறிந்து **விசுவாசமும் – கிரியையும்** கொண்ட கீழ்ப்படிதலில் வெற்றி சிறப்பார்கள்!

– *A.W.* டோசர்

---

## வீண் ஜெபம், வீண் ஆராதனை, மலிந்து விட்ட காலம் இது!

**த**ங்கள் இருதயங்களிலும், தங்கள் ஜீவியத்திலும், கர்த்தரை உத்தமமாய் ஆராதிப்பவர்களுக்கும், தங்கள் உதடுகளால் மாத்திரமே கர்த்தரை ஆராதிப்பவர்களுக்கும் இடையே பெருத்த வித்தியாசமுண்டு! உதாரணமாய், தங்கள் எஜமானனாகிய தேவனோடு ஐக்கியம் கொள்ளாமலே, அவருடைய நாமத்தை உச்சரித்து ஜெபிக்கும் இலட்சோப லட்ச மக்கள் இருக்கிறார்கள் என்ற உண்மை உங்களுக்கே தெரியும். நாம் அவரிலும் அவர் நம்மிலும் வாழ்ந்தால் மாத்திரமே, நம் ஜெபத்திற்கு பதில் உண்டு. "தேவன் அன்பாகவே இருக்கிறார்" என ஒருவன் அறிந்தும், அவரோடு தன்னை இணைத்துக்கொள்ளாமல், மற்றவர்களை அன்புகூரும் பெலனை ஒருபோதும் பெற்றுக்கொள்ள இயலாது!

ஆகவே தேவனுடைய தரத்தை இழந்துவிட்டு, நீங்கள் கூறும் ஜெபம் அல்லது ஆர்ப்பரிக்கும் ஆராதனை! வீணானது என்பதை அறிந்துகொள்ளுங்கள்.

ஒரு அரசனுடைய அவையில், தனவந்தன் பதவியிலிருந்த ஒருவன் மகா உண்மையுள்ளவனாய் அரசவையை சேவித்தான். அவனுடைய உத்தமத்தைக் கண்ட அரசனுக்கு, அந்த அரசவை தனவந்தன் மீது

*அளவற்ற பிரியம் இருந்து வந்தது. ஆனால் அந்த உத்தம தனவந்தனின் மகனோ, மிகவும் கேடான, தான்தோன்றித் தனமாய் வாழ்ந்து வந்தான். திடீரென்று ஒருநாள், தனவந்தனின் மகன் அரசனுக்கு முன்பாக வந்து நின்றான். அரசனைப் பார்த்து, ஓர் துடுக்கான துணிவோடு "மகா கனம் பொருந்திய அரசே! உங்கள் அரசவையில் உத்தமமாய் பணியாற்றும் தனவந்தனின் மகன் நான்... ஆகவே, எனக்கு தேவையான ஒரு சகாயத்தை, எனக்கு அருளும்படி வேண்டுகிறேன்!" என கூறி நின்றான். அதற்கு அந்த அரசன் "துணிகரமான விண்ணப்பம்! உன்னுடைய தந்தையின் பெயரை வைத்து, உனக்கு வேண்டிய ஒன்றை விண்ணப்பித்தது, உன்னுடைய மகா துணிகரம்! முதலாவது, உன் தந்தையின் கனம் பொருந்திய ஜீவியத்திற்கும், அவருடைய மாதிரிக்கும் இணையான ஒரு வாழ்க்கையை நீ கைக்கொண்டு வாழ முயற்சி செய்! உன் தகப்பனின் கனத்தை* **உன் உதடுகளில்** *சுமந்து வந்திருக்கிறாய். அவர் பெற்றுக் கொண்டிருக்கும் ஒப்பற்ற கனத்தை* **உன் இருதயத்தில் தாங்கி,** *அதை நடைமுறைப்படுத்தி வாழ்ந்திட முயற்சி செய்! அப்போது மாத்திரமே, உன் வேண்டுகோளுக்கு நான் செவிக்கொடுப்பேன்!" என கூறிவிட்டார்.*

*நம்முடைய முழு தாலந்துகளையும், அவர் தந்தருளிய அனைத்து திறமைகளையும்... இன்னும், நமக்கு சுவாசம், ஜீவன், சுக பெலன் தந்தருளின தேவனுக்கு முற்றிலும் சமர்ப்பிக்காமல் இருந்து கொண்டு "தேவன் மாத்திரமே அருளக்கூடிய" ஆவிக்குரிய உதவியை நாம் எதிர்பார்ப்பது வீண் என்பதை அறிந்து கொள்வோமாக!*

*– சாது சுந்தர்சிங்*

---

## 'தனித்தனி' உத்திரவாதமே, கிறிஸ்தவ ஜீவியம்!

*கத்தோலிக்க சபையைச் சேர்ந்த ஒருவரைப் பார்த்து: உங்கள் விசுவாசந்தான் என்னவென்று கேட்டதற்கு, அவர்: சபை என்ன போதிக்கிறதோ அதுதான் என் விசுவாசம்; அதற்குமேல் நமக்கென்ன? என்றார். ஒருவருக்குப் பிடித்தாலும் பிடிக்காவிட்டாலும், விளங்கினாலும் விளங்காவிட்டாலும், திருச்சபை சொல்வதற்கு மறுவார்த்தையின்றி கீழ்ப்படிய வேண்டுமென்பது கத்தோலிக்க சபையின் அதிகாரம். அந்த சபையைச் சேர்ந்த அரசு மருத்துவர் ஒருவர், எனக்குப் பழக்கம். ஒருநாள் நான் அவரைப் பார்த்து: உங்கள் ஆத்தும இரட்சிப்புக்காக என்ன செய்கிறீர்கள்? என்று கேட்டேன். அதற்கு அவர்: "எனக்கு ஆஸ்பத்திரியிலும் வீட்டிலும் போதுமான வேலை இருக்கிறது. என் ஆத்தும காரியங்களைக் கவனிக்க எனக்கு*

நேரமில்லை. அதை எங்கள் சாமியார் பார்த்துக்கொள்வார் என்றார். உங்களுக்கு வயிறு இருக்கிறதே, உங்களுக்குப் பதிலாக சாமியார் சாப்பிட்டால் உங்கள் பசி நீங்கிப்போகுமா? என்று கேட்டேன். அதற்கு அவரிடம் பதில் இல்லை. எத்தனை குருக்களும், சாமியாரும் நமக்கிருந்தாலும், எவ்வளவு சிறப்பான ஆராதனைகள் நடந்தாலும், நாம் தனித்தனியே **ஆண்டவருக்கு உத்தரவாதிகளென்பதை** மறக்கக் கூடாது. மிஷனெரிகளோ, குருமார்களோ அவர்களுடைய ஜீவியமும் போதனைகளும் நமக்குப் பிரயோஜனமாயிருந்தபோதிலும், நாம் தனித்தனியே ஆண்டவரைத் தேடி அவரை அறிகிற அறிவில் வளரவேண்டுமென்பது தேவசித்தமாயிருக்கிறது.

'அவனவன் தன் சரீரத்தில் செய்த நன்மைக்காவது தீமைக்காவது தக்க பலனை அடையும்படி நாம் எல்லாரும் கிறிஸ்துவின் நியாயாசனத்துக்குமுன் வெளிப்பட வேண்டும்'. அவ்வேளையில் நமக்காகப் பிணைப்பட்டு நம்மைத் தப்புவிக்க எந்த குருவாலும், சாமியாராலும், பிஷப்பாலும் முடியாது.

நாமே நமக்கு உத்திரவாதிகளாக நிற்போம். மேலும் நமதாண்டவர் மொத்தமாக அல்ல, ஒவ்வொருவருக்காகவும் தமது உயிரைக் கொடுத்திருக்கிறார். ஆகையால் அவர் மொத்தமாக அல்ல, தனித்தனி மனுஷனோடு பேசுகிறார். 'ஒருவன் தாகமாயிருந்தால்' 'ஒருவன் என்னைப் பின்பற்றி வர விரும்பினால்' 'ஒருவன் எனக்குச் சீஷனாயிருக்க வேண்டுமானால்' 'ஒருவன் எனக்கு ஊழியஞ் செய்கிறவனானால்' 'மனுஷர் முன்பாக என்னை அறிக்கை பண்ணுகிறவன் எவனோ' 'என் வசனத்தைக் கேட்டு அதன்படி செய்கிறவன் எவனோ' 'செய்யாதவன் எவனோ' 'ஒருவன் என்னிடத்தில் அன்பாயிருந்தால்' என்று தனித்தனி மனுஷனோடு பேசுகிறார். நாம் தனித்துப் பிறந்தோம், தனித்து மரிப்போம், தனித்து கர்த்தர் முன் நின்று கணக்கொப்புவிப்போம். இது விஷயத்தில் மற்றவர்கள் அதிகாரிகள் அல்ல!

– பரமானந்தம் ஐயர்

---

## சுவிசேஷம் அறிவிக்கும் 'கடமை' தவறும் கிறிஸ்தவம்!

**உ**லக சுவிசேஷகர்களில் பெரும்பாலோர் மரித்துப்போனார்கள் என்பது உங்களுக்குத் தெரியுமா? D.L.மூடி போய்விட்டார்! R.A.டோரி, J. உல்பர் சேப்மேன், பில்லிசண்டேயும்... தங்கள் வேலையை முடித்துப் போய்விட்டனர்! பக்தி சிறந்த சுவிசேஷகர்கள் பில்லி கிரஹாம், T.L.ஆஸ்பான் மரித்துவிட்டார்கள்! இன்று மிகவும் சொற்பமான பேர்களே, இவர்களின் ஸ்தானத்திலிருக்கிறார்கள். வேத

*கலாசாலைகள் தற்சமயம் போதகர்களையும், மிஷனெரிகளையும் ஆயத்தஞ் செய்கிறதேயொழிய சுவிசேஷகரைப் பக்குவப்படுத்துகிற தில்லை. எத்தனைபேர் இன்று சுவிசேஷப் பிரபல்யத்தின் சரித்திரத் தையும், எழுப்புதல் சரித்திரத்தையும் எடுத்துப் படிக்கிறார்கள்? பிரசித்திப்பெற்ற சுவிசேஷகர், எழுப்புதல் பிரசங்கிமார்... ஆகிய இவர்கள் ஜீவிய சரிதையையும், ஊழியமுறைகளையும் பற்றி எத்தனைபேர் படித்து, அறிந்திருக்கிறார்கள்? சுவிசேஷக் கூட்டங்களை ஏற்பாடு செய்து, ஒரு சிறு கூட்டத்திற்கு சுவிசேஷத்தை அறிவிக்கத் தூண்டும் தலைவர்களும் குறைந்து விட்டனர்!*

*மனித சரித்திரத்தில் இனி அடுத்து வரப்போகும் 15-வருடங்கள் மிகவும் பயங்கரச் சம்பவங்கள் நடக்கும் காலமாயிருக்கும். உலகைக் கொந்தளிக்கச் செய்யும் அடையாளங்கள் சீக்கிரம் நடைபெறப் போகிறது!*

*இன்று மனுமக்கள், அழிவையே நோக்கிக் கொண்டிருக்கிறார்கள். பயங்கரமான புரட்சிகள், ஆங்காங்கு நடைபெறுமாப் போலத் தெரிகிறது. சிருஷ்டிகள் சகலமும், ஏகமாய் தவித்துப் பிரசவ வேதனைப்படுகிறது. கர்த்தரின் வருகை சமீபம் என்றே இவை யாவும் எடுத்துக் காட்டுகின்றன! ஆனால், திரள் ஜனங்கள் இன்னமும் சுவிசேஷத்தை அறியாமலே வாழ்கிறார்கள்.*

**சுவிசேஷமே தேவபெலனுள்ளதாயிருக்கிறது! இக்காலத்தில் சுவிசேஷமே அறிவிக்கப்பட வேண்டியது அவசரத் தேவையாய் இருக்கிறது! இன்று அதை செய்யாவிடில், மானிடர்கள் நாசமாய் போவார்கள்!**

*பற்பல விஷயங்களில் நாம் ஒன்றுபடாவிட்டாலும், சுவிசேஷம் என்னும் விஷயத்தில் ஒன்றுபடக்கூடும். ஆத்துமாக்களை ஆண்டவரிடம் கொண்டுவரும் இச்சுவிசேஷ வேலையில்,* **உத்தம ஊழியர்களோடு** *நாம் ஒன்றுபட்டு வேலை செய்ய முடியும்.*

**அழியும் மக்களின் ஆத்தும கரிசனையே அல்லாமல், அவர்களின் பணத்தையோ அல்லது தங்கள் கௌரவத்தையோ நாடுகின்ற எந்த சுவிசேஷகனும் 'உத்தம உடன் ஊழியனாய்' இருந்திட இயலாது!**

*நமக்கு வேத ஆராய்ச்சிக் கூட்டங்களும், மாநாடுகளும் மட்டுமே தேவை... சுவிசேஷப்பிரபல்யம் அவசியமில்லை எனச் சொல்லுகிறவர்களும் இருக்கிறார்கள். ஆனால் சுவிசேஷப் பிரபல்யத்தினால், அநேக ஜனங்கள் உற்சாகமடைந்து, தேவனிடம் கிட்டிச் சேர்ந்ததை நாம் யாவருமே அனுபவத்தில் கண்டிருக்கிறோம்!*

*சுவிசேஷப் பிரபல்ய கூட்டங்களுக்குப்பின், தொடர்ச்சியான ஊழியம் செய்வது நல்லது. சுவிசேஷகர் மருத்துவச்சியைப்* (Nurse)

*போலிருக்கிறார். மருத்துவச்சி, ஒரு பிள்ளை உலகில் பிறப்பதற்கு உதவி செய்கிறாள். ஆனால் அவள் எக்காலமும் பிள்ளையின் பக்கத்திலிருந்து அதை வளர்க்க முடியாது. பெற்றோரே அதை கவனிக்க வேண்டும். சுவிசேஷகர் சென்ற பின், பெற்றோரைப் போலிருக்கும் போதகரும், ஓய்வுநாள் பாடசாலை ஆசிரியரும், வாலிபர் சங்கத்தின் தலைவர்களும், புதிதாய் குணப்பட்டவர்களுக்கு ஊழியம் செய்து, வேதத்தின் முக்கிய சத்தியங்களை அவர்களுக்கு கற்றுக் கொடுக்க வேண்டும். அப்போதுதான் அவர்கள் சத்தியத்தில் நிலைநின்று, இயேசு நாதருக்கு உற்சாகமுள்ள சாட்சியாய் விளங்குவார்கள்!*

**எந்த சுவிசேஷ ஊழியனும், தன் சபை போதகருக்கு அடங்கியிருந்தே ஊழியம் செய்ய கற்றுக் கொள்ள வேண்டும். ஒரு சுவிசேஷகன், போதகரை குற்றம் சாட்டி, கண்ணியக் குறைவாய் பேசுவது பெரிய தப்பு! சுவிசேஷ ஊழியத்தை விட, ஒரு சபை - போதக ஊழியம் துன்பம் மிகுந்தது என ஒரு நல்ல சுவிசேஷகன் மனதார அறிந்திருப்பான்.**

*முன்னோடியான பக்தர்களில் அநேகர், சுவிசேஷக் கூட்டங்கள் மூலமாக இரட்சிக்கப்பட்டதாகவே சரித்திரம் கூறுகிறது! அந்த புள்ளி விபரத்தில், சுவிசேஷ கூட்டங்களின் மூலமாகவே, இன்றுள்ள விசுவாசிகளில் 100-க்கு 62 பேர் கிறிஸ்துவினிடம் ஈர்க்கப்பட்டிருக்கி றார்கள். ஆகவே,* **இன்றைய வாலிபர்கள், சோம்பி நின்று விடாதபடி,** *சுவிசேஷ பிரபல்யத்திற்கென பேரார்வம் கொண்டு, நமக்கு முன் உழைத்த பெரியோர்களின் ஸ்தானத்திற்கு வந்து, இவ்வூழியத்தை நிறைவேற்றுவது அவசியம், மிகவும் அவசியம்!!*

*– ஆஸ்வால்ட் ஜே. ஸ்மித்*

---

## அன்பிற்கு சூரியன்! ஊழியத்திற்கு அடிமை! என இருப்பது பாக்கியம்!

*டோனாவூர் ஆசிரம ஊழியம், கைம்பெண்களுக்கும், தாசி கூட்டத்திலிருந்து விடுதலை பெற்றவர்களுக்கும், கைவிடப்பட்ட நிலையில் தவித்து நின்ற பெண்களுக்கும், இன்னும் இதுபோன்ற 'அன்பின் ஆதரவு ஏதுமில்லாத ஜனங்களுக்கும்' மிகுந்த கவனத்தோடும் தெய்வ பயத்தோடும் நடத்தப்பட்ட ஊழியமாகும். இந்த இழி நிலையிலிருந்த பெண்களின் வாழ்வில், மலர்ச்சி ஏற்படுவதைக் கண்டு மகிழ்ச்சியடைவது ஒரு பெரும் பாக்கியமாகும். இந்த ஊழியத்தை யாராகிலும் போற்ற வேண்மென நாங்கள் ஒருபோதும் விரும்பியதில்லை. கர்த்தருடைய அழைப்பின் பேரில், கர்த்தருக்காகவே செய்யப்பட்ட தியாக ஊழியமாகும். உன்னதத்தின் போற்றுதலைத் தவிர, எங்களைத் தேடி வந்த அனைத்து*

*போற்றுதலையும் கர்த்தருக்கே காணிக்கையாய் சமர்ப்பித்து ஊழியம் செய்தோம்!*

**சில காலங்களுக்குப் பின்பு, பிறரை அன்புகூரும் இந்த சமர்ப்பண ஊழியத்தில், அன்பை பெற்ற எங்களிடம், பதிலுக்கு அவர்கள் அன்பு செலுத்தவில்லை என்ற உணர்வு இருதயத்தில் ஒரு வறட்சியை ஏற்படுத்திவிட்டது!**

*ஆசிரமத்து ஏழ்மை பெண்களுக்கு செய்த ஊழியம் ஏராளமாய் இருந்தாலும், எங்களுக்கென்று தேவை ஏற்பட்ட சமயங்களில், இவர்கள் ஓடோடி வந்து ஊழிய உதவி செய்வார்கள் என்ற நிலை இல்லாததைக் கண்டு, உள்ளத்தில் தவிப்பு ஏற்பட்டது. இந்த 'மாயை - மேகம்' தேவனுடைய சமூகத்திற்குச் சென்ற பிறகுதான், அந்த மேகம் விலகி சென்றது!*

**இவ்வேளையில், கர்த்தர் கற்றுக்கொடுத்தது என்னவென்றால், தெய்வ அன்பு ஒன்றுதான், அதை மற்றவர்களுக்கு கொடுக்க கொடுக்க குறைவற்ற சலிப்பில்லாததாய் இருக்கும்!**

*அது ஒரு சூரியனைப்போல! இறைவனின் வெளிச்சத்தை தன்னிடத்தில் பெற்ற சூரியன், காலமெல்லாம் பிரகாசிக்கிறது! நல்லோர் மீதும் தீயோர் மீதும் எந்த மாறுபாடு சலிப்பில்லாமல், தொடர்ந்து பிரகாசித்துக்கொண்டே இருக்கிறது! ஏனென்றால், அது ஆதியில்* **தேவனால் பிரகாசிக்கப்பட்ட ஒளியாகும்.** *இந்த ஆதிநிலையில் மாற்றம் ஏற்பட்டு விட்டால் 'அன்பு வறட்சி' ஏற்பட்டுவிடும். இந்த நிலையில்தான்* **'பிறரால் அன்புகூரப்பட வேண்டும்' என்ற தாழ்வு எண்ணம்** *நம்மை வாட்டி வதைத்து விடுகிறது! அந்த கல்வாரி அன்பே, நித்தியம் நிறைந்த மாறாத அன்பாகும்! அந்த கல்வாரி அன்பிலிருந்து விலகுவது துயரம்! (மத்.6:45).*

*பரத்திலிருந்து பூமிக்கு மனுஷரூபமாய் இயேசு இறங்கி வந்த அடிப்படையான நிலை "அடிமை" என்ற ஸ்தானமேயாகும்!* **அடிமை, ஊழியம் செய்து கொண்டே இருப்பான்!** *பிறர் தனக்கு என்ன செய்ய வேண்டுமென்று ஒருபோதும் எண்ணமாட்டான். இயேசு தன் ஊழிய நிறைவில், "மேஜையில் அமர்ந்திருந்த நீங்களல்லவோ பெரியவர்கள்! நானோ அந்த மேஜைக்கு முன்பாக, உங்களுக்கு ஊழியம் செய்த பணிவிடைக்காரனாய் வந்தேன்!" என இயேசு சகல ஊழியத்தையும் செய்து முடித்த நிலையில், உறுதியாய் நின்று கூறினார். அந்த கல்வாரி அன்பை நோக்கிப் பார்த்து,* **பிறரை** *அன்புகூர்ந்து* **பிறருக்கு** *ஊழியம் செய்வதே பாக்கியம்! என உணர்ந்து, என் ஆத்துமாவை அமரச் செய்தேன்.*

*– ஏமி கார்மைக்கேல்*

## உபத்திரவங்களில், உத்தம கிறிஸ்தவனின் மனநிலை!

*ஒரு சாதாரண பிளம்பராய் வேலை செய்து வந்த விக்கிள்ஸ்வொர்த் கர்த்தருடைய ஊழியத்திற்கு பெயர் சொல்லி அழைக்கப்பட்டு வந்தார். தன் ஜீவியத்திலும், தன் ஊழியத்திலும் அவர் அடைந்த இன்னல்கள் ஏராளம். ‘‘மற்றவர்களை இரட்சித்தாய், உன்னை இரட்சித்துக் கொள்ள திராணி இல்லை’’ என கொல்கொதா மலையில், நிந்தை மொழியால் இயேசுவை சூழ்ந்து கொண்ட ஜனக்கூட்டத்தைப் போலவே, விக்கிள்ஸ்வொர்த்திற்கும் ஏற்பட்டது. மரித்தோரை உயிரோடு எழுப்பிய வல்லமை அவரிடமிருந்து புறப்பட்டு வந்தாலும்* **‘‘உமக்கு ஏன் மூல வியாதி?’’** *என்ற நிந்தை மொழி ஏற்றார்! ‘‘தன்னுடைய பெலவீனத்தில், தேவனுடைய பெலன் பூரணமாய் விளங்கும்’’ என்ற கிருபையின் இரகசியத்தை, ஜனங்கள் அறியாதபடியால், தங்கள் அறியாமையில் தேவனுடைய தாசர்களை பல்வேறு விதத்தில் நிந்தனை செய்து விடுகிறார்கள்! ஏன் அவர் கண்ணாடி அணிந்திருந்ததை கேள்விக் கேட்கக்கூட சிலர் விட்டு வைக்கவில்லை! ‘சுகமளிக்கும் வரம் பெற்றவர்’ என நாங்கள் அறிகிறோம். ஆனால், அவர் ஏன் தன் பார்வைக்கு கண்ணாடி அணிய வேண்டும்? என அவரது நண்பர்களும், சொந்த ஜனங்களும் கூட கேட்டு ஏளனம் செய்தார்கள்!*

*தன் ஊழிய ஓட்டத்தை ஜெயமாய் முடித்த விக்கிள்ஸ்வொர்த், சோதனைகளும் பாடுகளும் ஏராளமாய் தன்னை சந்தித்த வேளைகளில், தான் கொண்டிருந்த மனநிலையை கீழ்கண்டவாறு கூறினார்:*

> எத்தனை பாரங்கள் உங்கள் மீது விழுவதைப்போல் உணர்ந்தாலும், நீங்களோ கிறிஸ்துவுக்குள் நிலைத்திருங்கள்! ‘இச்சமயத்தில் வரப்போகும்’ விண்ணின் சுதந்தரத்தை நீங்கள் இழந்து விடாதபடி, உங்கள் மீது அமர்ந்திருக்கும் ‘‘தேவனுடைய அன்பின் கரத்தை’’ காணத்தவறாதீர்கள்! உங்களைச் சந்தித்த ஒவ்வொரு பாடுகளும், தனித்தனியே ‘‘ஒவ்வொரு பரிசு பெட்டகம்’’ என்பதை அறியுங்கள்! உங்கள் மேல் விழுந்த ‘ஒவ்வொரு பாரங்களும்’ ‘தெய்வ பெலனை பெற்றிட’ தேவன் வகுத்து தந்த ஸ்தலம்! என்பதையும் மறந்து விடாதீர்கள்!

*இவ்வாறாகவே துன்பங்களுக்குள்ளும் பாடுகளுக்குள்ளும், ஸ்மித் விக்கிள்ஸ்வொர்த்தின் மனநிலை இருந்தது. நம் ஒவ்வொருவருடைய துன்பநேரங்களிலும், அவர் கொண்டிருந்ததைப் போன்ற மன நிலையைப் பெற்று ‘ஜெயித்து வாழ’ தேவன் கிருபை செய்வாராக!*

*– ஸ்மித் விக்கிள்ஸ்வொர்த்*

# ஜான் தே பிரிட்டோ, (AD 1647-1693)
## தமிழகத்தின் வீர யோவான்ஸ்நானகன்



போர்ச்சுகல் நாட்டைச் சேர்ந்த *பிரிட்டோ* 15 வயதான போதே 'கிறிஸ்துவுக்கு ஊழியம் செய்ய' வெகுவாய் நாடினார். தன் ஊரிலுள்ள "இயேசு சபை" என்ற குருமடத்தில் சேர்ந்தார். மிகுந்த வைராக்கியத்தோடு இயேசுவை அறியாத இந்தியாவிற்கு புறப்பட்டார். கோவா நகரத்தை அடைந்த அவர், புனித சவேரியார் அங்கு பணியாற்றி மரித்த ஆச்சரியமான சாட்சியை கேட்டு, தன் பெயரை தமிழ் மொழியில் அருளானந்தர் என மாற்றிக் கொண்டு, காவி உடை தரித்து 'கொளை' என்னும் தமிழ்நாட்டின் கிராமத்திற்குச் சென்றார்.

அவருடைய ஊழியத்தில் உண்மையாய் மனந்திரும்பியவர்களுக்கு மாத்திரமே அவர் ஞானஸ்நானம் கொடுத்தார். திரளான ஜனங்கள் கிறிஸ்துவை இரட்சகராய் ஏற்றுக் கொண்டார்கள் என கேள்விபட்ட அப்பகுதி அரசன் குமரபிள்ளை, அருளானந்தரை சிறைப்பிடித்தான். இராமநாதபுரத்து மன்னன் சேதுபதி கோபத்தோடு கேட்ட அனைத்து கேள்விகளுக்கும் அருளானந்தர் சாந்தமாய் பதில் அளித்தார். சேதுபதி அவரை உடனே விடுதலை செய்தான். 19 ஆண்டுகள் அருளானந்தர் மதுரை, தஞ்சை, செஞ்சி, வேலூர், கோல்கொண்டபுரம் ஆகிய ஐந்து இடங்களிலும் பல துன்பங்களுக்கு நடுவில் பல்லாயிரக்கணக்கான மக்களை கர்த்தருடைய வழியில் திருப்பினார். 'சிறுவாலை' என்ற பகுதியில் சிற்றரசனாக இருந்த 'தடிய தேவர்' மரணத்திற்கு ஏதுவான தீராத கொடிய நோய் கொண்டார். சிகிச்சை பலனின்றி மரிக்கும் தருவாயில் அருளானந்தரிடம் ஆட்களை அனுப்பி தன் சுகத்திற்காக ஜெபிக்க கேட்டுக் கொண்டார். அருளானந்தர் ஜெபித்து முடித்த அதே வேளையில், *தடிய தேவர்* குணமடைந்தார். மிகுந்த தாழ்மையுடன், மனந்திரும்பிய தனக்கு ஞானஸ்நானம் தரும்படி வேண்டிக் கொண்டார். அவர் ஞானஸ்நானத்திற்கு தகுதிதானா? என்பதை வேத வாக்கியத்தின்படி சரிசெய்து கொண்ட அருளானந்தர், அவருக்கு ஐந்து மனைவிமார்கள் இருக்கிறார்கள் என்று அறிந்து, உள்ளம் வேதனை கொண்டார். வேத சத்தியத்தின்படி முதல் மனைவிதான் உரிமைக்குரியவள் என்பதை அறிந்து, முதல் மனைவியுடன் ஞானஸ்நானம் எடுப்பதற்கு தயாரானார். **தன்னோடு வைத்திருந்த மற்ற நான்கு மனைவிமார்களையும் அழைத்து, போதுமான பொன்னும் பொருளும் கொடுத்து திருப்பி அனுப்பினார்.** அந்த நான்கு பெண்களும் மிகுந்த அதிர்ச்சி அடைந்தார்கள். அவர்களில் *கடலாயி* என்ற பெண் அருளானந்தரை பழி வாங்க துடித்தாள். அவள் சேதுபதி அரசனின் தங்கை மகள். ஆத்திரமடைந்த சேதுபதி அவரை கைது செய்து சிறையிலிட்டார். அவருக்கு மரண தண்டனை வழங்கப்பட வேண்டிய நேரத்தில் அங்கு ஓடோடி வந்த சிற்றரசராகிய தடிய தேவர், உள்ளம் உருக "என்னை தெய்வத்திடம் நடத்திய குருவை கொல்வதற்கு முன்பாக என்னை கொல்லுங்கள்" என மறித்து நின்றார். ஆகவே அவரை, இரகசியமாக கொல்ல சிவகங்கைக்கு அருகிலுள்ள 'ஓரியூர்' என்ற இடத்திற்கு அழைத்து சென்று அவரை கொடூரமாக சிரச்சேதம் செய்தான். இரத்தம் பெருவெள்ளமாய் கொட்டிய அந்த இடம், பளபளக்கும் சிவப்பு மணலாய் மாறியது. ஆகவே, கிறிஸ்துவுக்கு வீர சாட்சியாய் மரித்த இந்த பரிசுத்தவானுக்கு "சிகப்பு மணல் பரிசுத்தவான்" என்ற பெயரும் உள்ளது!

*- கிறிஸ்துவின் பலிபீட சாட்சிகள்*

# நம் ஜீவிய கடிகாரமுள், நித்தியம் தொட வேண்டும்!

சரித்திரம் ஆரம்பமான காலமுதல் மனிதவர்க்கமானது காலத்தை கணக்கிடப் பற்பல ஏதுக்களைப் பயன்படுத்தி வந்திருக்கின்றது. பூர்வீக காலங்களில், காலத்தை அளவிடச் சூரிய பாகை பயன்படுத்தப்பட்டதை வேதாகமத்தில் நாம் காண்கிறோம் (ஏசா.38:8). காலத்தை அளவிடப் பூர்வத்தில் தண்ணீர் கடிகாரமும் பயன்படுத்தப்பட்டது. மணற்கடிகாரத்தைப் போன்றே, ஒரு பாத்திரத்திலுள்ள தண்ணீரானது பிறிதொரு பாத்திரத்திற்குள் சொட்டுச் சொட்டாக சிறிய துவாரம் ஒன்றின் வழியாக விழுந்து கொண்டிருக்கும் அளவை வைத்து காலத்தை கணித்தார்கள். பூர்வீகப் பாபிலோனியர்கள், காலத்தை நட்சத்திரங்களைக் கொண்டு கணித்து வந்தனர்.

ஆரம்ப காலத்தில் சீனர்கள் முடிச்சிடப்பட்ட எரியும் கயிற்றின் உதவியால் (Knotted Burning Rope) நேரங்களைக் கணக்கிட்டதாகக் கூறப்படுகின்றது. அளவுகள்படி செய்யப்பட்ட எரியும் மெழுகுவர்த்திகளாலும் காலம் அளவிடப்பட்டதாகச் சொல்லப்படுகின்றது.

புரதான காலத்து பற்பலவிதமான கால அளவுக் கடிகாரங்கள், மாற்றமுடியாததும், ஸ்திரமானதுமான ஒரே ஒரு விஷயத்தைத்தான் இன்றும் ஆணித்தரமாக நமக்குச் சுட்டிக் காண்பிக்கின்றது. அது என்னவெனில், "காலம் கடந்து கொண்டேயிருக்கின்றது. என்றாகிலும் ஒருநாள், நம்மனைவரின் இவ்வுலக ஜீவியத்தின் கடிகாரம் நின்றுவிடும்! ஆகிலும், நம் எல்லோருக்கும் நற்செய்தி ஒன்று உண்டு! நம் ஆத்துமாவை இரட்சிக்க, இந்த உலகம் வந்த இயேசு ரட்சகர் சிந்திய ரத்தத்தால், பாவ மன்னிப்பும் புதுவாழ்வும் பெற்றவர்களின் கடிகாரம் இந்த உலக ஜீவியத்தோடு நிற்பதில்லை! அது, "நித்திய ஜீவனுக்குள்" நம்மை நடத்தி, என்றென்றும் 'தெய்வ வாழ்வின் நித்தியத்தில்' தொடர்ந்து ஓடிக்கொண்டே இருந்திட முடியும்!".

ஓ, வாலிபனே! இந்த மதிமயக்கும் மாயலோகம் 'மாயை' என்றும், நித்தியமே வாழ்வின் இலக்கு! என்பதை அறிந்து தெய்வ பயத்துடன் உன் சிருஷ்டிகரை அண்டி வாழ, அவரிடம் உன் ஜீவியத்தை ஒப்புக்கொடுத்து, உன் ஜீவிய கடிகாரமுள், நித்தியத்தை தொடுவதாக!

*- சுவிசேஷ மலர்*

பரலோக பொக்கிஷங்கள்

Published by MADURAI CHRISTIAN FELLOWSHIP, a Regd Society.
Printed by The Orient Litho Press, Sivakasi. Editor T.Rathnakumar, Madurai.